

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி சேகர் எம்.எல்.ஏ. உரையாற்றினார். கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



மேயர் திருமதி ஆர். பிரியா, நேற்று முன்தினம் (24.05.2025) செனாய் நகரில் உள்ள அண்ணாநகர் மண்டல அலுவலகத்தில் ரூ.32 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நவீன குழந்தைகள் பாதுகாப்பு மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ. பிரவீன் குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் ந.அதியமான், டி.வி.செம்மொழி, எல்.சுந்தர்ராஜன், திருமதி மெட்டில்டா கோவிந்தராஜன், திருமதி சுதா தீனதயாளன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகத்தினர்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடுவீர்!

## கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வேண்டுகோள்!



திருவள்ளூர், மே.26

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் வரவேற்புரையற்றினார். தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் பி.ஜெ. மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், முன்னிலை வகித்தார்கள்.

இதில் தொகுதி பார்வையாளர் தமிழ் க.அமுதரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து பேசிய மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், திரு வள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சார்பு அணிகள் நிர்வாகிகள், தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் தெரு பிரச்சாரம் பொதுக்கூட்டங்கள் வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு மன நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏழை எளிய பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் மாவட்ட அணிகள் நடத்தும் நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட நிர்வாகம் உறுதுணையாக இருக்கும் என தெரிவித்தார்.

வருகின்ற ஜீன் 5 தேதி அன்று திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உட்பட்ட பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகளில் கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளருமான முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா மற்றும் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் சார் ஆகியோர் கலந்து கொள்ளும் ஆலோசனை கூட்டத்திற்கு மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகள் அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் வரும் இருப்பதால் அதற்கான தேர்தல் பணிகளை மிகவும் முன்வரமாக செயல்பட்டு பொதுமக்களிடம் கழகத் தலைவர் அவர்கள் செய்த சாதனைகளை தெரிவித்து தேர்தலுக்கான பணிகளை மிகச் சிறப்பாக செயல்பட்டு மீண்டும் நமது திராவிட மாடல் அரசின் முதல்வரும் கழக தலைவர் அன்பு தளபதி மு.க ஸ்டாலின் அவர்களை முதல்வர் இருக்கையில் அமர வைத்து வரை உழைக்க வேண்டும் என கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துகொண்டார்

மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், மற்றும் ஒன்றிய நகர கழகச் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, நா.பரிமளம், ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி, வெற்றி(எ)ராஜேஷ், ஜி.பி.வெங்கடேசன், க.சம்பத், ஏ.தேவேந்திரன், பாஸ்கர், கோகுல், ஜி. சுமன், தனசேகரன், கோபி, முகமது அலவி, தேசராணி தேசப்பன், , ஜெயலலிதா சசிதரன், கோல்டு மணி, வில்சன், ஆறுமுகம், மணி, ஏ.கே.சம்பத் குமார், ரமேஷ், ரோஸ் பொன்னையா, முத்துக்குமார், ஞாயிறு ஆனந்தகுமார், கோளூர் ஜெயசித்தரசிவராஜ், எல்லாபுரம் ராஜேஷ், இரா.அப்புன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் முன்னாள் மாவட்ட பிரதிநிதி வல்லூர் பா.து. தமிழரசன் நன்றி கூறினார்.

### கோவி. லெனின் பங்கேற்பு!

# 123 ‘அ’ வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் அறிவிப்பு!

சென்னை, மே 26-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி 123 அ வட்டக்கழகம் சார்பாக பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (26.05.2025 - திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் BLA (2) BLC கூட்டம் மைலாப்பூர் சட்டமன்ற அலுவலக வளாகத்தில் 123அ வட்ட கழக செயலாளர் மு. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறகிறது.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி முன்னிலை வகிக்கிறார்.

மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, எம்.எல்.ஏ. ஆலோசனைபடி சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் கோ.வி. லெனின் கலந்துக் கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

ஆகவே இந்த சிறப்பு மிக்க கூட்டத்திற்கு வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், (BELA2) பாக உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 123அ வட்டக் கழகம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு 123 அ வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



வாலாஜாபாத் பேரூர் கழகம் சார்பாக கழகத்தின் நான்கு ஆண்டு சாதனை விளக்க புத்தகம் பேருந்து நிலையம் ராஜவீதி பஜார் வீதி ஆகிய இடங்களில் பேரூர் கழக செயலாளர் என்.பாண்டியன் தலைமையில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பி. சேகர், பேரூராட்சி மன்ற தலைவர் இல்லாமல்லி ஸ்ரீதரன், துணைத் தலைவர் எஸ்.வி.சுரேஷ்குமார், டி.சஞ்சயகாந்தி, கே. தியாகராஜன், பழனி, பரமானந்தம், ஆட்சி பாபு ஜி.சுகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார்

### மே 26 (1989)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

“தென்னாட்டு போர்க்களங்கள்” உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், பிரெஞ்சு உள்ளிட்ட பத்து மொழிகளை நன்கு கற்றறிந்தவர்.

“தோய்ந்த புலமையாலும், ஆழ்ந்த ஆராய்ச்சியாலும் அறிஞர்கள் பலர் தொடமுடியாத எல்லைகளையெல்லாம் ஆராய்ந்து விரிவாக எழுதியவர் நமது பன்மொழிப் புலவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கலில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### பேரூர் செயலாளர் என்.பாண்டியன் தலைமையில் – பி.சேகர் முன்னிலையில்

# வாலாஜாபாத்தில் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க துண்டுப்பிரசுரம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கி தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், மே 26 -

கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க புத்தகம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் வாரணவாசி ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளர் உத்தர மேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் பி.சேகர், ஒன்றிய குழு தலைவர் ஆர். கே.தேவேந்திரன், பேரூர் கழக செயலாளர் என். பாண்டியன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் அப்துல் மாலிக், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.சஞ்சய் காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வாலாஜாபாத் பேரூர் கழகம் சார்பாக கழகத்தின் நான்கு ஆண்டு சாதனை விளக்க புத்தகம் பேருந்து நிலையம் ராஜவீதி பஜார் வீதி ஆகிய இடங்களில் பேரூர் கழக செயலாளர் என்.பாண்டியன் தலைமையில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பி. சேகர், பேரூராட்சி மன்ற தலைவர் இல்லாமல்லி ஸ்ரீதரன், துணைத் தலைவர் எஸ். வி.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.சஞ்சய காந்தி, பேரூர் கழக அவைத்தலைவர் கே. தியாகராஜன், பேரூர் கழக துணை செயலாளர்கள் பழனி, பரமானந்தம், பொருளாளர் ஆட்சி பாபு, இளைஞர் அணி அமைப்பாளர் இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை வெங்கடேசன் – திருச்சி ஆரிஃப் மஃபுல் முன்னிலையில்

# சவுதி அரேபியா கிழக்கு மண்டலத்தில் அடையாள அட்டை பதிவு முகாம்!

## தி.மு.க. அயலக அணி – தமிழ்நாடு நலச்சங்க நிர்வாகிகள் பங்கேற்பு!

தமாம், மே 26-

சவுதி அரேபியா தமாம் கிழக்கு மாகாணத்தில், தமிழ்நாடு அரசின் அடையாள அட்டை பதிவு முகாம் மற்றும் 11 இந்தியர்கள் நாடு திரும்ப சவுதி அரேபியா தி.மு.க. அயலக அணி மற்றும் தமிழ்நாடு நலச்சங்கம் நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மஃபுல் மேற்கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடல் கடந்து வாழும் தமிழர்களையும் கருணை உள்ளத்தோடு பார்த்து அவர்களின் எதிர்கால நலன் கருதி தமிழர்களை அடையாளப்படுத்தும் விதமாக அடையாள அட்டையும் அவர்களுக்கான காப்பீட்டு திட்டத்தையும் உருவாக்கினார்.

தமிழ்நாடு அரசின் இந்த உயரிய திட்டத்தை சவுதி அரேபியா கிழக்கு மண்டலத்தில் இருக்கும் தமிழர்களும் பயனடையும் வகையில் கடந்த பல ஆண்டுகளுக்கும் மேலாக சவுதி அரேபியாவில் வாழும் தமிழ் மக்களுக்கு அரணாக விளங்கும் தமிழ்நாடு நலச் சங்கம் மற்றும் திராவிட முன்னேற்ற கழக அயலக அணி தமிழக அரசால் உருவாக்கப்பட்ட வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர் நலச் சங்கம் சார்பாக இரண்டு நாட்களாக மாபெரும் அடையாள அட்டை பதிவு முகாம் நடைபெற்றது.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த முகாமில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் அடையாள அட்டையை பெறுவதற்காக பதிவு செய்து அடையாள அட்டையும் பெற்றுச் சென்றனர்.

மேலும் இம் முகாமில் பல மாதங்களாக வழக்குகள் காரணமாக தாயகம் திரும்ப முடியாமல் பரிதவித்து வந்த இந்தியர்களுக்கு தமிழர் உள்பட வட இந்தியர்கள் குறிப்பாக மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், ஆந்திரப்பிரதேசம், கேரளாவை சேர்ந்தவர்கள் என்று 11 இந்தியர்களுக்கு தாயகம் செல்ல இந்திய தூதரகம் மற்றும் சவுதி அரசின் உதவியுடன் சான்றிதழ் EXIT PAPER வழங்கப்பட்டது.

இந்த முகாமை கழக அயலக அணி மற்றும் தமிழ்நாடு நலச்சங்க தலைவர் மயிலாடுதுறை வெங்கடேசன் தலைமையிலும், துணைத் தலைவர் திருச்சி ஆரிஃப் மஃபுல் முன்னிலையிலும் பொதுச்செயலாளர் முகவை சீனி முஹம்மது ஏற்பாட்டிலும் நடைபெற்றது.

மேலும் இம் முகாமில் தமிழ்நாடு நலச்சங்க நிர்வாகிகளான செயலாளர் துறையூர் கமல் பாஷா, பொருளாளர் திருச்சி யூனிஸ்கான், கலை மற்றும் இலக்கிய அணி காயல்முகமது நூஹ், தொழில்நுட்ப அணி சென்னை இம்ரான், அக்பர், அபூ ரையான், முஹம்மது பாரூக், சாகுல் ஹமீது, சென்னை ஜியான், ஜான் ரிஷி சாகுல், மற்றும் பல்வேறு தமிழ் அமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர் மற்றும் கோவை தெற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை. |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| | காலை 10.00 மணி | கோவை வடக்கு | தாரஹா மஹால், பெரியநாயக்கன்பாளையம். |
| | மதியம் 12.00 மணி | கோவை மாநகர் | கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல், வடகோவை. |
| | மாலை 5.30 மணி | கோவை தெற்கு | ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே.திருமண மண்டபம், கோவில்பாளையம் சாலை, பெரிய நெகமம். |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி